பாதையின் ஓரங்கள் அமுங்கிவிடுவதால் எதிரே வருகின்ற வாகனங்களுக்கு வழிவிடுகின்ற வகையில் சற்று ஒதுங்க இயலவில்லை. ஆகவே அந்தப் பாதையினை அகலப்படுத்தி விட்டால், எதிரே வருகின்ற வாகனங்களுக்கு வழிவிட்டுச் செல்வதற்கு ஏதுவாக அமையும். ஆகவே அந்த வகையில் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, வரும் ஆண்டுகளில் மாநில சாலைகள் திட்டத்தின் கீழாக அது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலிலே அமைச்சரவர்கள் பதிலளிக்கின்றபோது வேதாரண்யத்திலே உள்ள சாலைகள் நல்ல முறையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் மூதறிஞர் ராஜாஜி அவர்களும், சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களும் உப்பு சத்தியாக்கிரகம் செய்த இடத்தில் உள்ள நினைவுச் சின்னத்திற்கும் நகரத்திற்கும் இடையே உள்ள பாதை மிகவும் பாழடைந்திருப்பதாகவும் அதைச் சீரமைக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குக் கோரிக்கை வந்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போடவும்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திருவாடானை ஒன்றிய அலுவலகக் கட்டிடம்.

*வினா எண் 422—திரு. க. அங்குசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானையில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடானை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசு, அரசு ஆணை எண் 306-ன் கீழ் அனுமதி அளித்துள்ளது. அதனுடைய மதிப்பீடு 3,25,000 ரூபாய். நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1981 மார்ச் 7]

திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருவாடானை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்காகக் கட்டிடம் இருந்து, அக்கட்டிடம் இடிந்து விட்ட காரணத்தினால், அந்த இடத்தில் மீண்டும் கட்டிடம் கட்டப் பெறுமானால், பலமாக இருக்காது, மண்ணினுடைய வளம் நல்ல முறையில் இல்லை என்பதாகக் கூறி அங்கே மீண்டும் கட்டிடம் கட்டக் கூடாது என்பதாக ஒரு நிலையை அரசு எடுத்துள்ளதாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே, அங்கே மீண்டும் கட்டிடம் கட்டப் படுமா? கட்டப்படுமானால், பலம் உள்ளதாக இருக்கும் என்று அரசு நினைக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, திருவாடானை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீட்டைப்பற்றிச் சொன்னேன். 3½ இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பெற்றிருக்கிறது. கட்டிடம் கட்டப் பெறுகிற அந்த இடம் எப்படி உள்ளது என்பதைப் பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடத்தினுடைய தன்மைகளை ஆராய்ந்து அறிந்த பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த இடத்திலே வானம் திறக்கப்பட்டிருக்கிறது. அதுவும் மார்ச் மாதத்திற்குள்ளாக அந்தக் கட்டிடம் கட்டப்பட வேண்டும் என்ற குறிப்பும் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்திலே மீண்டும் கட்டிடம் கட்டும்போது பலமாக இருக்காது என்று கருதுகிறேன். ஆகவே, அதை மாற்றி வேறு நல்ல இடத்தில் கட்டிடத்தை அமைக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு ஒப்புதலே கடந்த 2 ஆம் தேதிதான் கொடுக்கப்பெற்றிருக்கிறது. 7 ஆம் தேதியன்று அங்கே வானம் திறக்கப்பட்டிருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். எவ்வளவு சீக்கிரத்தில் அரசு, வேலைகளை விரைந்து செயல்படுத்துகிறது என்பதை இதிலிருந்தே தெரிந்து கொள்ள முடியும். என்றாலும், அந்த இடம் சரியில்லை என்று நிபுணர்கள் சொன்னால், அது குறித்து ஆலோசனை செய்து, செம்மையாகப் பணிகள் நடைபெறும் வகையில் அரசு வேறு இடத்திற்குக் கட்டிடம் கட்டும் இடத்தை மாற்ற நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு, இப்படிப் புதிய கட்டிடங்கள் கட்டும் போது, காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு மட்டும் அனுமதி அளிக்கப் பெறுவதில்லை..........(மணியடிக்கப் பெற்றது.)

1981 மார்ச் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி திருவாரூர் ஒன்றியத்தை பற்றியது. பொதுவாகக் கேட்கக்கூடாது. உட்காருங்கள். வினா எண் 423.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 423, 424 ஆகிய இரண்டும் தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிய கேள்வியாக இருப்பதால், இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொண்டால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தன்னிறைவுத் திட்டம்.

*வினா எண். 423—**திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய அரசு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒன்றியங்களின் அபிவிருத்திக்காக நடப்பு ஆண்டு (1980–81) ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இத்திட்டத்திற்கு மத்திய நிதி ஒதுக்கீடு இல்லை

*வினா எண். 424—**திரு. மி. வின்செண்ட் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் செயல்படும் முன்னோடி திட்டமான தன்னிறைவுத் திட்டம் போல் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது செயல்படுகிறதா ?

(ஆ) ஆம் என்றால் அந்தத் திட்டத்திற்கும் நமது திட்டத்திற்கும் வித்தியாசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தெரிந்தவரை இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்தத் தன்னிறைவுத் திட்டத்திற்கு ஏதாவது நிதி உதவி செய்கிறதா ? இல்லை என்றால், மாநில அரசு தமிழகத்தின் ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திற்கும் இத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இந்த 3 ஆண்டுகளில் எவ்வளவு தொகை செலவு செய்திருக்கிறது என்பதையும் அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில்; இது தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய தன்னிகரில்லாத்